# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 416/2025 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 6 |

| | | |
|---|---|---|
| Name | : | நடேசன் |
| Father's Name | : | மாமுண்டி |
| Village | : | எறையசமுத்திரம் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | விவசாய கூலி |
| Religion | : | இந்து |
| Age | : | 42 |
| ACCUSED | | எதிரி சடையப்பன் ஆஜர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது எறையசமுத்திரத்தில் குடியிருந்து விவசாய கூலிவேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள நடேசன் என்ற முதல் கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

போலீசார் விசாரணையின் போது 04.09.2017-ஆம் தேதி காலை நானும் எனது உறவினர் கதிர்வேல் என்பவரும் இருசக்கர வாகனத்தில் ரெங்கநாதபுரம் சென்ற போது பெரம்பலூர் போலீசார் 03.09.2017-ஆம் தேதி அன்று இரவு நடைபெற்ற விபத்து சம்மந்தமாக பெரம்பலூர் செட்டிக்குளம் செல்லும் சாலையில் ஆதரவற்றோர் பள்ளி அருகே சம்பவ இடத்தில் விசாரணை செய்து

கொண்டிருந்ததாகவும் அப்பொழுது எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் மேற்படி பார்வை மகஜரில் நானும் கதிர்வேலும் விபத்து நடைபெற்ற இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாகவும் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்பொழுது எதிரியை காப்பாற்ற வேண்டி உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

இல்லை.

**மறுவிசாரணை :– இல்லை**

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**